# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No :C.C.No. 135/2022

Prosecution witness : **அ.சா. 1** **Date : 24.05.2023**

| | |
|---|---|
| **Name : அமிர்தம்** | Caste : வன்னியர் |
| **Husband's Name : சேட்டு** | Calling : - |
| Village : சீரங்கனூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 40 |

( A1 and A3 present.A2 absent. Filed 317 CrPC petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் பயிற்சி வகுப்புக்கு சென்றுவிட்டதால் நீதிமன்றமே சாட்சிகளை விசாரணை செய்கிறது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் சீரங்கனூரில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 7.30 மணியளவில் நான் வாங்கிய காட்டை ஓட்டுவது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சினையின்போது எதிரி வெங்கடேஷ் எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து என்னையும் என் கணவரையும் தேவடியா, கண்டார ஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி என் கணவரை எதிரி வெங்கடேஷ் கையால் குத்தி என் கணவரின் மேல் முன் இரண்டு பற்களை உடைத்துவிட்டார். சாட்சி அந்த இரண்டு பற்களை எடுத்து வந்திருப்பதாக காண்பிக்கிறார். எதிரி குமார் என்பவர் என் முடியை பிடித்து இழுத்து முதுகின் மீது குத்தி நான் அணிந்திருந்த ஜாக்கெட்டை பிடித்து கிழித்துவிட்டார். தடுக்க வந்த என் மகன் மணிகண்டனை எதிரி செல்வம் கையால் என் மகனின் முகத்தின் மீது அடித்ததில் வலது நெற்றி பகுதியில் காயம் ஏற்பட்டது. சண்டை முடிந்த பின் என் கணவர் சேட்டுவையும் என் மகன் மணிகண்டனையும் முருகன் மற்றும் ராஜா என்பவர்கள் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தனர். எனக்கு வெளிப்புறக்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதால் நான் மருத்துவமனையில் சேரவில்லை. இது சம்மந்தமாக நங்கவள்ளி காவல்நிலையத்தில் நான் அன்றைய தினமே

எழுத்துமூலமான புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS
# In the Court of Judicial Magistrate No.I, Mettur
# Case No :C.C.No. 135/2022

Prosecution witness : **அ.சா. 2** **Date : 24.05.2023**

| | |
|---|---|
| **Name : சேட்டு** | Caste : வன்னியர் |
| **Father's Name : வீரப்பன்** | Calling : கூலி |
| Village : சீரங்கனூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 45 |

( A1 and A3 present.A2 absent. Filed 317 CrPC petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் பயிற்சி வகுப்புக்கு சென்றுவிட்டதால் நீதிமன்றமே சாட்சிகளை விசாரணை செய்கிறது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் சீரங்கனூரில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி செல்வம் எனது தம்பி. எதிரிகள் வெங்கடேஷ், குமார் எனது தம்பி மகன்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 7.30 மணியளவில் நான் வாங்கிய காட்டை ஓட்டுவது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சினையின்போது எதிரி வெங்கடேஷ் எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து என்னையும் என் மனைவியையும் தேவடியா, கண்டார ஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டியும் என்னை எதிரி வெங்கடேஷ் கையால் குத்தி என் மேல் முன் இரண்டு பற்களை உடைத்துவிட்டார். அதனால் எனக்கு பற்களில் ரத்தம் ஏற்பட்டது. சாட்சியின் வாயின் மேல் முன்பகுதி பற்கள் இல்லாமல் காணப்பட்டது. அதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டேன். ராஜா என்பவர் என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார். போலிசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஓம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No :C.C.No. 135/2022
## Prosecution witness : அ.சா. 3 Date : 24.05.2023

| | |
|---|---|
| **Name : மணிகண்டன்** | Caste : வன்னியர் |
| **Father's Name : சேட்டு** | Calling : கூலி |
| Village : சீரங்கனூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 28 |

( A1 and A3 present.A2 absent. Filed 317 CrPC petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் பயிற்சி வகுப்புக்கு சென்றுவிட்டதால் நீதிமன்றமே சாட்சிகளை விசாரணை செய்கிறது.

**முதல் விசாரணை**

1) நான் சீரங்கனூரில் குடியிருக்கிறேன். நான் கல் உடைக்கும் வேலைக்கு செல்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் உறவினர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 7.30 மணியளவில் நான் வாங்கிய காட்டை ஓட்டுவது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சினையின்போது எதிரி வெங்கடேஷ் எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து என் அம்மாவையும் என் அப்பாவையும் தேவடியா, கண்டார ஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி என் அப்பாவை எதிரி வெங்கடேஷ் கையால் குத்தி என் அப்பாவின் மேல் முன் இரண்டு பற்களை உடைத்துவிட்டார். எதிரி குமார் என்பவர் என் அம்மாவின் தலை முடியை பிடித்து இழுத்து முதுகின் மீது குத்தி என் அம்மாவின் ஜாக்கெட்டை பிடித்து கிழித்துவிட்டார். தடுக்க வந்த என்னை எதிரி செல்வம் கையால் என் முகத்தின் மீது அடித்ததில் வலது நெற்றி பகுதியில் காயம் ஏற்பட்டது. சண்டை முடிந்த பின் என் அப்பா சேட்டுவையும் என்னையும் முருகன் மற்றும் ராஜா என்பவர்கள் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தனர். இது சம்மந்தமாக நங்கவள்ளி காவல்நிலையத்தில் என் அம்மா புகார் அளித்தார். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**